
# DISTRIBUTION OF PROVISIONS TO DIFFERENTLY ABLED PEOPLE

## (26.06.2018)

## 252 மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்



► உடுமலை ஸ்ரீஜிவிஜி மகளிர் கல்லூரியின் மகளிரியல் மையம் மற்றும் செஷயர் ஹோம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் விழா உடுமலை ஸ்ரீஜிவிஜி மகளிர் கல்லூரியில் நடந்தது.

திருப்பூர், ஜூன் 26: உடுமலை ஸ்ரீஜிவிஜி மகளிர் கல்லூரியின் மகளிரியல் மையம் மற்றும் செஷயர் ஹோம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் விழா உடுமலை ஸ்ரீஜிவிஜி மகளிர் கல்லூரியில் நடந்தது. இதில் கல்லூரி தாளாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார். முதல்வர் புனிதவல்லி, கணிததுறை தலைவர் கலைசெல்வி, செஷயர் ஹோம் ஒருங்கிணைப்பாளர் ராஜராஜன் முன்னிலை வகித்தனர். இதில் 54 பேருக்கு முக்கூற்சி வாகனங்களும் 34 பேருக்கு செவித்திறன் அறியும் கருவிகளும், 6 பேருக்கு ஸ்மார்ட் கேன் கருவியும், 32 பேருக்கு கைத்தடிகளும், 24 பேருக்கு செயற்கை கை, கால் ஆகியவையும், 102 பேருக்கு இரு சக்கர வாகனங்களும் என 252 பேருக்கு வழங்கப்பட்டது.

# Students' Union Election - (13.07.2018)

## ஆன்-லைனில் பேரவை தேர்தல்

**உடுமலை, ஜூலை 13–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாணவியர் தலைவர், செயலாளர், துணை செயலாளர் மற்றும் பல்வேறு மன்றங்களுக்கான பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நேற்று காலை, 9:30 மணிக்கு துவங்கியது. அதில், 1,746 மாணவியர் 'ஆன்லைன்' மூலம் வாக்களித்தனர்.

மூன்றாமாண்டு கணிதத்துறை மாணவி ஸ்மிருதி மாணவியர் தலைவியாகவும், விலங்கியல் துறை மாணவி, அகல்யா செயலராகவும், கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை மாணவி வைஷ்ணவி துணை செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலுக்கான ஏற்பாடுகளை கல்லூரி பேரவை ஒருங்கிணைப்பாளர் சரஸ்வதி செய்திருந்தார். வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது.

தினமலர் உடுமலை செய்தி Pg: No (3)

# Conference on how to increase the fertility of the soil (25.07.2018)

# மண்ணின் வளத்தை பெருக்க வேண்டும்!

## கருத்தரங்கில் விவசாயிகளுக்கு அறிவுரை

**உடுமலை, ஜூலை 25–**

"இயற்கை வேளாண் சாகுபடிக்கு மண்வளமே அடிப்படை ஆதாரமாக உள்ளதால், முதலில் விவசாயிகள் மண்வளத்தை பெருக்க வேண்டும்," என, இயற்கை வேளாண் வல்லுனர் பாமயன் தெரிவித்தார்.

உடுமலையில், இயற்கை விவசாயிகள் ஆர்வலர்கள் குழு சார்பில், இயற்கை வேளாண் கருத்தரங்கம் நடந்தது. அதில், இயற்கை வேளாண் வல்லுநர், பாமயன் பேசியதாவது:

இயற்கை வேளாண் சாகுபடிக்கு, மண்வளமே அடிப்படை ஆதாரமாக உள்ளதால், விவசாயிகள் மண்வளத்தை பெருக்க வேண்டும். பாரம்பரிய வேளாண் சாகுபடியில் பயிர்களுக்கு நேரடி உணவு வழங்குவதில்லை. பதிலாக நுண்ணுயிர்களுக்கு வழங்கப்பட்டு, அதன் மூலம் பயிர்கள் சத்துக்களை கிரகித்து கொள்கின்றன. நுண்ணுயிர்கள் ஆக்குதல், காத்தல் மற்றும் அழித்தல் உட்பட மூன்று வித பணிகளை மேற்கொள்கின்றன. அதாவது, நாம் கொடுக்கும் உரங்களை சத்துக்களாக மாற்றி, பயிர்களுக்கு கொடுக்கின்றன.

நோய்த்தாக்குதலை கட்டுப்படுத்தி பயிர்களை காக்கின்றன. பயிர்களுக்கு தீங்கு செய்யும் பாக்[illegible]யாக்களை அழிக்கின்ற[illegible] இதனால், நுண்ணுயிர்[illegible] பயிர்களுக்கு பல நன்மைகளை செய்கின்றன.

நிலங்களில் நுண்ணுயிர்கள் நிலைப்பெறச்செய்ய வளமான மண் இருப்பது அவசியம். மண்வளத்தை மேம்படுத்துவதற்கு ஒரே ஆதாரம் இயற்கை உரங்கள் மட்டுமே. இந்நிலையில், மக்கிய தொழுஉரங்கள், மண்புழு உரங்கள், பஞ்சகவ்யம், அமிர்த கரைசல், ஜீவாமிர்தம், தேங்காய் மோர் கரைசல் மற்றும் பூச்சிவிரட்டி உள்ளிட்ட, விவசாயிகளே மேற்கொள்ள கூடிய பல்வேறு வகையான இயற்கை உரங்கள் உற்பத்தி செய்து பயன்படுத்தலாம்.

இயற்கை முறையில் உற்பத்தி [illegible]ய்யப்படும் பொருட்களு[illegible] போதிய சந்தை வாய்ப்புகள் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், சிறு விவசாயிகளிடமிருந்து இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்களை கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும்.

இவ்வாறு, அவர் பேசினார். தொடர்ந்து, கோவை கரும்பு இனப்பெருக்கக்கழக விஞ்ஞானி ஈஸ்வரமூர்த்தி, தமிழ்நாடு நீர்வள வளர்ச்சிக் குழும துணைத்தலைவர் இளங்கோவன் உள்ளிட்டோர், தண்ணீர் சிக்கனம் மற்றும் கட்டுப்பாடு, இயற்கை வேளாண் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு மேலும் எடுத்துரைத்தனர்.

இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.



உடுமலை அடுத்த, பாலப்பம்பட்டியில் நடந்த இயற்கை வேளாண் கருத்தரங்கில் கலந்து கொண்ட, விவசாயிகள் மற்றும் மாணவர்கள்.

# STUDENT COUNCELLING (26.06.2018)

## கல்லூரி மாணவர் பேரவை நிர்வாகிகள் பொறுப்பேற்பு




உடுமலை ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்த, புதிய மாணவர் பேரவை நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் மாணவியர் உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

**உடுமலை, ஆக. 2–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி மாணவர் பேரவை நிர்வாகிகள் பதவியேற்று உறுதிமொழி எடுத்தனர்.

உடுமலை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் மாணவர் பேரவை தேர்தல் நடந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற மாணவியர், தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சி, ஜி.வி.ஜி., கலையரங்கில் நடந்தது. பேராசிரியர் சரஸ்வதி வரவேற்றார். நிகழ்ச்சியில் பங்கேற்ற கலெக்டர் பழனிசாமி, மாணவியருக்கு பதவி பிரமாணம் செய்து பேசுகையில், ''குழந்தைகள், பல பட்டங்களு ' பதக்கங்களும் பெற்றாலும், பெற்றோரை மதிட ..தும், அவர்களின் அனுபவத்தையும் வழிகாட்டுதலையும் ஏற்றுக்கொள்வதுதான் முழுமையான வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்லும். ஒரு இலக்கை நிர்ணயித்து, அதை அடைய கடின உழைப்பு அவசியம்,'' என்றார்.

மாணவர் பேரவைத்தலைவராக, ஸ்மிரித்தி, செயலாளராக அகல்யா மற்றும் நிர்வாகிகள் பதவியேற்றுக்கொண்டனர். விழாவில், ஆர்.ஜி.எம்., பள்ளி அறங்காவலர் நந்தினி, கல்லூரி செயலாளர் ரவீந்திரன், கல்லூரி முதல்வர் கலைச்செல்வி, கோட்டாட்சியர் அசோகன், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், மாணவியர் பங்கேற்றனர்.

# PLEDGE (16.08.2018)



ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாணவியர் உறுதிமொழி ஏற்றனர்.

பன் தலைமை வகித்தார். அனைவருக்கும் கல்வி இயக்கக ஆசிரியர் பயிற்றுனர் ராபின் கொடி ஏற்றினார். உடுமலை வனச்சரக [illegible]வலர் தனபாலன், சுதந்[illegible]ர தினம் பற்றி பேசினார்.


உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், கல்லூரி முதல்வர் கலைச்செல்வி தேசியகொடி ஏற்றினார். தேசியமாணவர் படை மாணவியர் தேசியக் கொடி ஏற்றினர். கல்லூரி பேரவைத் தலைவி ஸ்மிரிதி, தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை எடுத்துரைக்க, மாணவியர் பின்தொடர்ந்தனர்.

உடுமலை, ருத்ரப்பநகர் குடியிருப்போர் நல சங்கத்தின் சார்பில் நடந்த விழாவில், சங்கத்தலைவர் ராமலிங்கம் கொடியேற்றினார். சங்க செயலாளர் கலைராஜன் வரவேற்றார். சங்க பொருளாளர் ஆறுமுகம் நன்றி கூறினார்.

உடுமலை, சிவசக்தி காலனி விரிவாக்க குடியிருப்போர் நல சங்கத்தின் சார்பில் நடந்த விழாவில், ஓய்வுபெற்ற அரசு அதிகாரி குத்புதீன் கொடி ஏற்றினார். சங்கத்தலைவர் நாகராஜன் தலைமை வகித்தார். சங்கத்தின் கவுரவத் தலைவர் கோபாலன் முன்னிலை வகித்தார். செயலாளர் சிவக்குமார் ஆண்டறிக்கை வாசித்தார்.

# APTITUDE TEST - STUDENT PARTCIPATION

## (31.08.2018)



**திறனறித்தேர்வு மாணவர்கள் பங்கேற்பு**

**உடுமலை, ஆக. 31–** பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான அறிவியல் திறனறித் தேர்வு, உடுமலை ஜி.வி.ஜி., பெண்கள் கல்லூரியில் நேற்று நடந்தது.

இந்திய இயற்பியல் ஆசிரியர் கழகம் சார்பில், ஆண்டுதோறும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான அறிவியல் திறனறித் தேர்வுகள் நடக்கிறது. நடப்பாண்டுக்கான தேர்வை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரி இயற்பியல் துறை நடத்தியது.

இத்தேர்வில், உடுமலை, ஆர்.ஜி.எம்., பள்ளி, விசாலாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி உட்பட பத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளும், கமலம் கல்லூரி, உடுமலை அரசு கல்லூரி, பழனியாண்டவர் ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரி, சுப்ரமணியா கல்லூரியிலிருந்தும், 300க்கும் மேற்பட்ட மாணவர்கள், தேர்வில் பங்கேற்றனர்.

இத்தேர்வில், தேர்வாகும், முதல் இருபது மாணவர்கள் முதல் தகுதிச் சுற்று தேர்வுக்கு தகுதி பெறுகின்றனர். தேசிய அளவில் வெற்றி பெறும் மாணவருக்கு முதல் பரிசாக, ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

# AWARENESS RALLY AGAINST PLASTIC

## (01.09.2018)

## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

**உடுமலை, அக். 1–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு குறித்த விழிப்புணர்வு பேரணி நடந்தது.

கல்லூரி முதல்வர் கலைச்செல்வி பேரணியை துவக்கி வைத்தார். பேரணி எஸ்.வி.,புரம், கொழுமம் ரோடு வழியாக மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# GUIDANCE FOR THE DISABLED (02.09.2018)

## மாற்றுத்திறனாளிகளுக்கு வழிகாட்டல்

### இரு நாட்கள் கருத்தரங்கில் தகவல்

**உடுமலை, செப். 2–**

உடுமலை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வியலுக்கு வழிகாட்டுதல் தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரி மற்றும் செஷயர் ஹோம் இணைந்து இரண்டு நாட்கள் கருத்தரங்கம் நடத்தியது. முனைவர் சுந்தரிபாய் வரவேற்றார்.

கல்லூரி முதல்வர் கலைச்செல்வி தலைமை வகித்தார். செஷயர் ஹோம்ஸ் செயலாளர் [illegible]லட்சுமி முன்னிலை வகித்தார்.

மாற்றுத்திறனாளிகள், வேலைக்கு செல்ல தங்களை எவ்வாறு தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை, சென்னை, தனியார் நிறுவன ஆலோசகர் சங்கர் தெளிவுபடுத்தினார்.

குடும்பம், மற்றும் சூற்றுச்சூழல் காரணங்களால் உடல் குறைபாடு ஏற்படுவதை, முனைவர் மணிமேகலை விளக்கினார். ஈரோடு வேலை வாய்ப்புத்துறை அலுவலர் சுப்ரமணி, மாற்றுத்திறனாளிகளுக்கு, அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் குறித்து, விளக்கமளித்தார். பேராசிரியர் யமுனா நன்றி தெரிவித்தார்.




உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரியில் மாற்றுத்திறனாளிகளுக்கான வழிகாட்டுதல் கருத்தரங்கம் நடந்தது.

# SILVER MEDAL IN SHOOTING:APPRECIATION FOR NCC PROFESSOR (05.09.2018)

## துப்பாக்கி சுடுதலில் வெள்ளிப் பதக்கம்: என்சிசி பேராசிரியருக்கு பாராட்டு

உடுமலை, செப். 5: அகில இந்திய அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற என்சிசி பேராசிரியரைப் பாராட்டும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

தேசிய மாணவர் படையினருக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள குவாலியரில் நடைபெற்றது.

இம் முகாமில் அகில இந்திய அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டி நடந்தது. இதில் மொத்தம் 107 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில், உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் தேசிய மாணவர் படைப் பிரிவு சார்பில் கலந்துகொண்ட பேராசிரியர் பி.கற்பகவல்லி அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.



பாராட்டுச் சான்றிதழைப் பெறுகிறார் பேராசிரியர் கற்பகவல்லி.

இதையொட்டி, கல்லூரி வளாகத்தில் கற்பகவல்லியைப் பாராட்டும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இதில் கல்லூரித் தாளாளர் கெ.ரவீந்திரன், முதல்வர் எஸ். கலைச்செல்வி, பேராசிரியர்கள் கலந்துகொண்டு கற்பகவல்லியைப் பாராட்டினர்.

# NATIONAL SCIENCE TEST - APTITUDE TEST(10.09.2018)

## தேசிய அறிவியல் சோதனை திறனறி தேர்வு



உடுமலையிலுள்ள ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் இயற்பியல் துறையை தேர்வு மையமாக தேர்ந்தெடுத்து, தேசிய அறிவியல் சோதனை திறனறித்தேர்வை இந்திய இயற்பியல் கழகம் நடத்தியது.

திருப்பூர், செப்.10: இந்திய இயற்பியல் கழகம், உடுமலையிலுள்ள ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் இயற்பியல் துறையை தேர்வு மையமாக தேர்ந்தெடுத்து, தேசிய அறிவியல் சோதனை திறனறித்தேர்வை நடத்தியது. முதல்கட்டமாக நடந்த தேர்வில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் 300 பேர் தங்கள் திறனை வெளிப்படுத்தினர். இதில் பள்ளிகளை சேர்ந்த 12 பேரும், கல்லூரிகளை சேர்ந்த 10 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்தகட்ட திறனறித் தேர்வில் பங்கேற்றனர். அதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு முறையே ரூ.ஆயிரம், ரூ.750, ரூ.500 வழங்கப்பட்டது. இதில் தேர்வு செய்யப்படுபவர்கள் வரும் 29ம் தேதி மற்றும் 30ம் தேதி ஐஐடி கான்பூரில் நடைபெறும் இறுதி தேர்வில் பங்கேற்கின்றனர்.


# TABLE TENNIS: GVG TEAM WON THE MATCH (21.09.2018)

தினமலர் 21-9-2018 உடுமலை செய்தி Pg: No 3

## டேபிள் டென்னிஸ்: ஜி.வி.ஜி., அணிக்கு வெற்றி

**உடுமலை, செப். 21–**

பாரதியார் பல்கலைக்கழக கல்லுாரிகளுக்கிடையே நடந்த, மாணவியருக்கான டேபிள்–டென்னிஸ் போட்டியில், ஜி.வி.ஜி., கல்லுாரி வெற்றி பெற்றது.




■ பாரதியார் பல்கலைகழக கல்லூரிகளுக்கு இடையேயான டேபிள் டென்னிஸ் போட்டி உடுமலை ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்தது.

உடுமலை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி கல்லுாரியில், பாரதியார் பல்கலைக்கழக கல்லுாரிகளுக்கு இடையேயான, டேபிள்–டென்னிஸ் போட்டி நடந்தது. மாணவியருக்கான. இப்போட்டியில், 10 அணிகள் பங்கேற்றன. இதில், 'லீக்', அடிப்படையில், நான்கு அணிகள் மோதியது. இதில் அதிக புள்ளிகள் பெற்று உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லுாரி முதலிடம், கோவை பி.எஸ். ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் கல்லுாரி இரண்டாமிடம், கோவை பி.எஸ். ஜி., கலை அறிவியல் கல்லுாரி மூன்றாமிடம் மற்றும், பொள்ளாச்சி என். ஜி.எம்.,கல்லுாரி நான்காமிடமும் [illegible]றன. நான்கு அணிகளிலு[illegible] மாணவியருக்கும் தனித்தனியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதல் இரண்டு இடங்களை பெற்ற அணிகளுக்கு, 'சுழற்கோப்பை', வழங்கப்பட்டது. பரிசளிப்பு விழாவில், தமிழ்நாடு மூத்[illegible] ருக்கான விளையாட[illegible] சங்கத்தின் இணை செயலாளர் சுனித், தலைமை வகித்தார். கல்லுாரி முதல்வர் கலைச்செல்வி முன்னிலை வகித்தார். போட்டிகளை, கல்லுாரி உடற்கல்வி இயக்குனர் சுஜாதா ஒருங்கிணைத்தார்.

# CLEANING WORK OF STUDENTS AT THIRUMURTHY DAM (22.09.2018)

## திருமூர்த்தி அணையில் மாணவியர் தூய்மைப்பணி

**உடுமலை, செப். 22-**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி மாணவியர், திருமூர்த்தி அணை பகுதியில் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டனர்.


'தூய்மை இந்தியா', விழாவையொட்டி, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி மற்றும் தாகம் தன்னார்வல அமைப்பு இணைந்து தூய்மைப் பணிகளை வழிநடத்தினர்.

கல்லூரி கம்ப்யூட்டர் பயன்பாட்டு துறை மற்றும் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவைச் சேர்ந்த, 200 மாணவியர் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் வாரியாக பிரித்து சேகரித்தனர்.

கடந்த வாரமும், வேறு பிரிவு மாணவர்கள் தூய்மைப்பணியில் ஈடுபட்டனர். பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த வேண்டுமென, பேராசிரியர்கள் அறிவுரை வழங்கினர். கல்லூரி முதல்வர் கலைச்செல்வி முன்னிலை வகித்தார்.

# CONSUMER AWARENESS MEETING (24.09.2018)

## ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி கல்லூரியில் நுகர்வோர் விழிப்புணர்வு கூட்டம்




▶ உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நுகர்வோர் விழிப்புணர்வு மன்றம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

---

**உடுமலை, செப்.24:** உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி நுகர்வோர் விழிப்புணர்வு மன்றத்தின் சார்பில் நுகர்வோர் மற்றும் சட்ட விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர், விலங்கியல் துறை இணை பேராசிரியர் கலைசெல்வி வரவேற்றார். வக்கீல் சத்யவாணி சட்ட விழிப்புணர்வு குறித்துபேசினார். அவர் பேசுகையில், சட்டம் குறித்த அறிவை மாணவிகள் வளர்த்து கொள்ள வேண்டும், சட்ட விழிப்புணர்வு பெற்று சமுதாயத்தில் மதிப்பு மிக்கவராக திகழ வேண்டும்' என்றார்.

வக்கீல் தம்பிபிரபாகரன் பேசுகையில், நாம் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்து தங்களுடைய உரிமைகளை நுகர்வோர் அறிந்திருக்க வேண்டும்.' என்றார். கூட்டத்தில், மன்றத்தின் செயலாளர் அபிராமி உட்பட மாணவிகள் பங்கேற்றனர்.

# AWARENESS AGAINST PLASTIC (25.09.2018)



## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு

**உடுமலை, செப். 25–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியின் சார்பில், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப் புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி ஆங்கிலத்துறை மாணவி சங்கமித்ரா வரவேற்றார். கல்லூரி முதல்வர் கலைச்செல்வி துவக்கி வைத்தார். சரஸ்வதி தியாகராஜா கல்லூரி ஆங்கிலத்துறை இணை பேராசிரியர் சந்திரன், பிளாஸ்டிக் பயன்பாடுகளால் ஏற்படும் பாதிப்பு கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ராஜலட்சுமி, பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த மாண வியர் தீவிரம் காட்ட வேண்டுமென வலியுறுத்தி னார். நிகழ்ச்சியில் மாணவியருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

# AWARENESS RALLY AGAINST HARMCAUSED BY PLASTIC PRODUCTS (27.09.2018)

## பிளாஸ்டிக் பொருட்களால் தீமை மாணவிகள் விழிப்புணர்வு பேரணி



▶ உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடந்தது.

**திருப்பூர், செப்.27:** உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடந்தது.

பேரணியை முதல்வர் கலைசெல்வி துவக்கி வைத்தார். பேரணி கல்லூரியில் துவங்கி எஸ்.வி.புரம், கொழுமம் ரோடு, அண்ணா குடியிருப்பு வழியாக மீண்டும் கல்லூரியை அடைந்தது. பேரணியில் மாணவிகள் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி, கோஷம் எழுப்பி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் பொறுப்பாளர் உமாதேவி மற்றும் உறுப்பினர்கள் ஸ்ரீபிரியா, அன்புசெல்வி, பூரணி உட்பட 250க்கு மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

# WOMENS’ HOCKEY TOURNAMENT (28.09.2018)

# மாணவியர் ஹாக்கி போட்டி துவக்கம்

## களத்தில் 7 கல்லூரி அணிகள் கலக்கல்

**உடுமலை, செப். 28 –**

உடுமலையில், பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையே, மாணவியருக்கான ஹாக்கி போட்டி நேற்று துவங்கியது.

உடுமலை, நேதாஜி மைதானத்தில் பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டி நடக்கிறது. மாணவியருக்கான போட்டி நேற்று துவங்கியது.

துவக்க விழாவில், வித்யாசாகர் கல்லூரி முதல்வர் மருதுபாண்டியன் தலைமை வகித்தார். பூளவாடி அரசுமேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மஞ்சுளாமணி மற்றும் எஸ்.கே.பி.,பள்ளி உடற்கல்வி ஆசிரியர் அன்பரசு போட்டிகளை துவக்கி வைத்தனர். இப்போட்டியில், வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த,




■ உடுமலை நேதாஜி மைதானத்தில் நடந்த ஹாக்கி போட்டியில் ஜி.வி.ஜி.விசாலாட்சி மற்றும் நவரசம் கல்லூரி அணிகள் மோதின.

7 கல்லூரி அணிகள் பங்கேற்றன.

முதல் மூன்று சுற்றுகள் ‘நாக் அவுட்’, முறையில் நடந்தது. இதில், முதலாவது சுற்றில், உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரி அணி 1–0 என்ற கோல் கணக்கில் கோவை நிர்மலா கல்லூரி அணியையும், பாரதியாார் பல்கலைக்கழக அணி, 3-[illegible] என்ற கோல் கணக்கில், கோவை, பி.எஸ்.ஜி., கிருஷ்ணம்மாள் கல்லூரி அணியையும் வீழ்த்தின.

தொடர்ந்து, காங்கேயம் நவரசம் கல்லூரி அணி, குன்னூர் ப்ரோவிடன்ஸ் கல்லூரி அணியை 5–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

கோல் அடிப்படையில், உடுமலை ஜி.வி.ஜி.,பெண்கள் கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழக அணி மற்றும் காங்கேயம் நவரச கல்லூரி அணிகளும், கோபி பி.கே.ஆர்., கல்லூரி நேரடியாகவும் ‘லீக்’, சுற்றில் நுழைந்தன.

முதலாவது ‘லீக்’, ஆட்டத்தில், 12 கோல்கள் அடித்து பி.கே.ஆர்., கல்லூரி அணி அசத்தலாக விளையாடியதுடன், எதிரில் விளையாடிய பாரதியார் பல்கலைக்கழக அணியை கோல் எதுவும் போட விடாமல் வெற்றி பெற்றது.

# THE SHOPPING FESTIVAL (29.09.2018)



உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், முன்னாள் மாணவியர் சங்கம் சார்பில் மெகா ஷாப்பிங் நடந்தது.

## ‘ஷாப்பிங்’ திருவிழா 25 அரங்குகள் அமைப்பு

**உடுமலை, செப். 29–**

உடுமலை, ஜி.வி.ஜி., கல்லூரி நிர்வாகம் மற்றும் முன்னாள் மாணவியர் சங்கத்தின் சார்பில், ‘ஷாப்பிங்’ திருவிழா கண்காட்சி நேற்று துவங்கியது.


உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், கல்லூரி நிர்வாகம் மற்றும் முன்னாள் மாணவியர் சங்கத்தின் சார்பில் ‘ஷாப்பிங்’, திருவிழா நேற்று துவங்கி, நாளை (30ம் தேதி) வரை நடக்கிறது. கண்காட்சியை, கல்லூரி செயலாளர் ரவீந்திரன் துவக்கி வைத்தார்.

கல்லூரி முதல்வர் கலைச்செல்வி மற்றும் முன்னாள் மாணவியர் சங்கத்தினர் முன்னிலை வகித்தனர். கண்காட்சி, காலை, 10:00 மணிக்கு துவங்கி, இரவு, 9:00 மணி வரை நடக்கிறது.

இதில், குழந்தைகளுக்கான விளையாட்டு அரங்கம், உணவுத்திருவிழா, பெண்களுக்கான அணிகலன்கள், ஆடை, விதவிதமான கைப்பைகள் உட்பட, 25 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

# 87th BIRTHDAY OF DR.V.GENGUSAMY NAIDU

# (04.10.2018)



# NEW ORDER OF ELECTION COMMISSION
# (13.10.2018)

## தகவல் பலகையில், 'கல்லூரி அம்பாசிடர்'

## தேர்தல் கமிஷன் புதிய உத்தரவு

**திருப்பூர், அக். 13–**

கல்லூரியிலுள்ள தகவல் பலகையில், 'அம்பாசிடர்' குறித்த விவரங்களை, வைக்குமாறு, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

இந்திய தேர்தல் கமிஷன், இளம் வாக்காளர்கள் மட்டுமல்லாமல், எதிர்கால வாக்காளர்களுக்கும், தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. கல்லூரி மாணவர்கள், 18 வயது பூர்த்தியடைந்ததும், வாக்காளராக பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, கல்லூரிகளில், தேர்தல் கமிஷன் மூலமாக அம்பாசிடர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். செப்.,1 முதல், வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் நடந்து வருகிறது. 18 வயது பூர்த்தியானவர்களை, தவறாமல் பட்டியலில் இணைக்கும் வகையில், கல்லூரி அம்பாசிடர்களுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி அம்பாசிடராக நியமிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியரின் முழு விவரத்துடன், தகவல் பலகை வைக்க, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, கல்லூரிகளில் நேற்று, அம்பாசிடர் தகவல் பலகை வைக்கப்பட்டது.

தேர்தல் பிரிவினர் கூறுகையில், 'லோக்சபா தேர்தல் வர இருப்பதால், கல்லூரி அம்பாசிடர் நியமன விவரத்தை அனைவருக்கும் தெரியப்படுத்தி, வாக்காளர் சேர்ப்பு பணியை ஊக்குவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 15 நாட்களுக்குள், 18 வயது பூர்த்தியான அனைவரையும், வாக்காளராக பதிவு செய்ய உதவ வேண்டுமென, அம்பாசிடர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்' என்றனர்.

# GRADUATION (16.10.2018)

## ஜிவிஜி கல்லூரியில் பட்டமளிப்பு விழா




விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர் கே.ராமசாமி. உடன், கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன்.

**உடுமலை, அக்.16:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஜிவிஜி கலையரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில், கோவை தமிழ்[illegible] வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது:

பெண்கள் கல்வி கற்பது என்பது வாழ்க்கையை உயர்த்துவதற்கான மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவிகள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பெண் கல்வி கற்றால் அவரது குடும்பமே மேம்பாடு அடையும்; நாடும் வளர்ச்சி பெறும் என்றார். விழாவில், 2013 முதல் 2016 வரையிலான கல்வியாண்டில் படித்த இளநிலையில் 817 மாணவிகளும், முதுநிலையில் 119 மாணவிகளும் என மொத்தம் 956 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. கல்லூரி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் தி.வி.பானுமதி மற்றும் துறைப் பேராசிரியர்கள் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# THE FIRST IS OURS (25.10.2018)

## மாற்றத்திற்கான

# முதல் அடி... எங்களுடையது!

**விலங்கிலிருந்து வந்த மனிதன், மீண்டும் விலங்காகவே மாறிக் கொண்டிருக்கிறான். தன்னோடு சமூகத்தையும், காட்டுப் பாதையிலே அழைத்து செல்கிறான். திரும்பும் திக்கெல்லாம் திசை மாறியவர்களாகவே தெரிகின்றனர்.**

எட்டு வயது சிறுமி ஆசிபா, இச்சைக்காக சிதைக்கப்பட்டு, புதைக்கப்பட்டிருக்கிறாள். உடலின் தேவைக்காக, பெற்ற குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துக் கொன்றிருக்கிறாள் ஒருத்தி. குழந்தைக்கு அன்போடு இனிப்பு கொடுத்த ஒரு குடும்பத்தை, குழந்தையை கடத்த வந்தவர்கள் என்று கொடூரமாய்க் கொன்றிருக்கிறது ஒரு கூட்டம். அரிசி திருடினான் என்று ஓர் அப்பாவியை அடித்தே சாகடித்திருக்கிறார்கள்... எங்கே போகிறது இந்த தேசம்?

அன்பு, கருணை, இரக்கம், பரிவு, தானம், தர்மம் என்று எல்லாவற்றையும் போதித்து, பண்பாட்டில் திளைத்த இந்த பாரத தேசம், ஏன் இப்படி எதிர் திசையில் பயணிக்கிறது. அரசு சரியில்லையா, அரசை ஆளும் தலைவர்கள் சரியில்லையா, மக்களின் மனநிலையில் ஏனிந்த மாற்றம், சட்டத்தின் மீது பயமில்லையா, சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மீது நம்பிக்கையில்லையா? என்ற கேள்விகள் பல இருக்கின்றன.

மக்கள் தான் இப்படி மாறி விட்டார்கள் என்றில்லை. அரசின் நிலை, அதை விட அவலமாய் இருக்கிறது. அன்றாட நிகழ்வுகளை ஆழமாய்த் துருவிப் பார்த்தால், அத்தனை தவறுகளுக்குமான ஆரம்பப்புள்ளி, ஆட்சி, அதிகாரத்தில் இருப்போரிடமிருந்து துவங்குவதாகவே தெரிகிறது.

லஞ்சம், ஊழல், முறைகேடு, ரவுடியிசம், கடிவாளம் இல்லா இணைய சுதந்திரம், கடமையைச் செய்யாத காவல் துறை, தாமதமாகும் அல்லது தட்டிக் கழிக்கப்படும் நீதி என மக்களை நம்பிக்கை இழக்கச் செய்யும் காரணிகள், ஏராளமாய் இருக்கின்றன. ஆளும்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் மாறி மாறி குறை சொல்வதிலேயே காலம் கழிகிறது. பரபரப்பு நாடகம் போடுவதில் மட்டுமே, ஊடகங்களின் கவனம் இருக்கிறது.

ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு கட்சி வெற்றி பெறுகிறது; மக்கள் தோற்றுக் கொண்டே இருக்கின்றனர். அளவு கடந்த ஊழலில், தமிழகமே தலை குனிந்து கொண்டிருக்கிறது; அரசு இயந்திரங்கள் முடங்கிக் கிடக்கின்றன. தவறு செய்தவர்கள் தைரியமாக வலம் வருகிறார்கள். ஊழலுக்காக ஒருவரது பதவியும் பறிக்கப்படுவதாகத் தெரியவில்லை. சாமானியன் தவறு செய்தால், சட்டம் உடனே பாய்கிறது; பதவியில் இருப்பவருக்கு பல்லக்கு துாக்குகிறது.



ச. சுமையா பர்வீன்

மனிதம் தொலைத்த மக்கள், லஞ்சத்தில் திளைக்கும் அதிகாரிகள், நேர்மையைத் தொலைத்த வணிகம் என, எங்கெங்கு காணினும் அறம் தொலைந்து போயிருக்கிறது.

லஞ்ச, லாவண்யம், ஊழல் இல்லாத, அன்பும், மனிதமும் கலந்த ஒரு தமிழ் தேசத்தைக் காண வேண்டுமென்று இளைய தலைமுறை ஏங்குகிறது. வேறு எதுவும் மாறுமென்று காத்திருக்க வேண்டாம்; மாற்றத்திற்கான முதல் அடியை நாம் எடுத்து வைப்போம்...

**ச. சுமையா பர்வீன்**
**பி.காம்., – 3ம் ஆண்டு**
**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலை**

மாணவர் கட்டுரை – தினமலர் 2

**இப்பகுதியில் வெளியாகும் சிறந்த கட்டுரையாளருக்கு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்**

# LEADERSHIP TRAINING (27.10.2018)

## தலைமை பண்பு பயிற்சி

உடுமலை, அக்.27–

உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியும், பொள்ளாச்சி அரிமா சங்கம் மற்றும் செந்தமிழ் மன்றம் இணைந்து தலைமையை நோக்கி என்ற தலைப்பில் தலைமைப்பண்பு பயிற்சி முகாம் ஜி.வி.ஜி.விசாலாட்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அரிமா சி.பி.ரமேஷ் அனைவரையும் வரவேற்றார்.

அரிமா க.தங்கராஜ் அறிமுக உரையாற்றினார். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி தலைமை தாங்கினார். தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மொழிப்புல தத்துவமைய உதவி பேராசிரியர் கோ.ப.நல்லசிவம் தலைமைப்பண்பு பற்றி பேசினார். முடிவில் மாணவி சவு.கிருத்திகா நன்றி கூறினார்.



உடுமலை அரசு கலைக்கல்லூரி வளாகத்தில்

## தேவையற்ற பொருட்களை அகற்றிய மாணவர்கள்

உடுமலை, அக்.27–

உடுமலை நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை நகராட்சி ஆணையாளர் ராஜாராம் உத்தரவின் பேரில் நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி நகராட்சி பகுதியையொட்டி உள்ள இடத்தில் அமைந்துள்ள அரசு கலைக்கல்லூரியிலும், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், நகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு கல்லூரி வளாகத்தில் ஆங்காங்கு கிடந்த தேவையற்ற பொருட்களை நாட்டு நலப்பணித் திட்ட மாணவ–மாணவிகளால் அகற்றப்பட்டது.

# TRAINING IN COLLEGE (13.12.2018)

## கல்லூரியில் பயிற்சி

உடுமலை, டிச. 13–

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி வணிகவியல் மற்றும் மேலாண்மைத் துறை சார்பில், வங்கி பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்லூரி நிர்வாகம் மற்றும் திருப்பூர் மாவட்ட பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து, 'எஸ்பிஐ யோநோ', என்ற வங்கி அப்ளிகேஷன் பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

கோவை, எஸ்பிஐ வங்கி அதிகாரிகள், ராஜேந்திரன், சவுத்ரி, அங்குராஜ் பயிற்சி அளித்தனர். கோவை, எஸ்பிஐ வங்கியை சேர்ந்த நவீன், பண மதிப்பிழப்பு மற்றும் டிஜிட்டல் வங்கி குறித்து மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாணவியரும், தொழில்நுட்ப வங்கி பயன்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

# AWARENESS RALLY (29.12.2018)




பிளாஸ்டிக் பொருட்களின் தீமை குறித்து

## கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு பேரணி

மடத்துக்குளம்,டிச.29– மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஜோத்தம்பட்டி ஊராட்சி பகுதி கணியூர் பேரூராட்சி பகுதியை ஒட்டி உள்ளது. இங்கு ஏராளமான கடைகள் உள்ளன. வருகிற 1–ந்தேதி முதல் பிளாஸ்டிக் பயன்படுத்த அரசு தடை விதிக்கப்பட்டு உள்ளதை தொடர்ந்து வியாபாரிகளிடமும், பொது மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக உடுமலை விசாலாட்சி பெண்கள் மகளிர் கல்லூரி மாணவிகள் ஜோத்தம்பட்டி ஊராட்சி பகுதியில் பேரணி நடத்தினர்.

பேரணிக்கு மடத்துக்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராமராஜ் முன்னிலை வகித்தார். பேரணி ஜோத்தம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் தொடங்கி, கணியூர் பஸ் நிலையத்தின் வழியாக மடத்துக்குளம்–கணியூர் சாலையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அருகே நிறைவு பெற்றது. பேரணியில் மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர். பேரணி முடிவில் ஊராட்சி செயலாளர் முகமது இசாக் நன்றி கூறினார்.

# STUDENT ACHIEVEMENT: INTERNATIONAL SKATING COMPETITION (30.12.2018)

### சர்வதேச ஸ்கேட்டிங் போட்டி:

## திருப்பூர் மாணவர்கள் சாதனை

திருப்பூர், டிச.30–

ஸ்பீடு கேட்டிங் பெடரேசன் ஆப் இந்தியா மற்றும் கில் போர்ட் பப்ளிக் பள்ளி இணைந்து நடத்தும் சர்வதேச அளவிலான ஸ்கேட்டிங் போட்டி மாராட்டிய மாநிலம் நாக்பூரில் கடந்த 27–ந்தேதி தொடங்கி நேற்று வரை நடைபெற்றது. இந்த போட்டியில் துபாய், நேபாளம், பூடான், இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து 6 வயது முதல் 16 வயதுவரை உள்ள 750–க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

போட்டிகள் மாணவ–மாணவிகளுக்கு தனித்தனியே 400 மீட்டர், 600 மீட்டர், 1,000 மீட்டர் என்று 3 பிரிவுகளில் நடைபெற்றன. இதில் திருப்பூரை சேர்ந்த தனசேகர், கிஷோர், ஸ்ரீநிதி, ஆர்த்தி ஆகிய 4 பேர் வெற்றி பெற்று பெற்றனர். இவர்களில் 400 மீட்டர், 600 மீட்டர் போட்டிகளில் தனசேகர் 2 தங்கம், 1 வெள்ளி பதக்கங்களையும், கிஷோர் 1 வெள்ளி, 1 வெண்கல பதக்கங்களையும், ஸ்ரீநிதி 3 தங்க பதக்கங்களையும், ஆர்த்தி 3 தங்கப்பதக்கங்களையும் வென்று சாதனை படைத்துள்ளனர். சாதனை படைத்த மாணவ்–மாணவிகளை பயிற்சியாளர்கள் காமராஜ், பார்த்தீபன் ஆகியோர் பாராட்டினார்கள்.

# SKILL DEVELOPMENT TRAINING (03.01.2019)

## கல்லூரி மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி



திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவிகள்.

**உடுமலை,ஜன.2:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

டிசம்பர் 26ஆம் தேதி கல்லூரி வளாகத்தில் துவங்கிய இந்த முகாம் ஜனவரி 2ஆம் தேதி நிறைவடைந்தது. முகாமை கல்லூரியின் செயலர் கெ.ரவீந்திரன் துவக்கி வைத்தார். முதல்வர் எஸ். கலைச்செல்வி முன்னிலை வகித்

இதில் பனையோலைகளைக் கொண்டு பல்வேறு பொருள்களைத் தயாரிக்க மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திருப்பூர் நிஃப்ட் டீ கல்லூரி இந்தப் பயிற்சிகளை வழங்கியது. இதில் பனை ஓலைகளைக் கொண்டு விதம் விதமான கூடைகள், தட்டுகள், காதணி [illegible]ள், வளையல்கள், பல்வேறு அலங்காரப் பொருள்களைத் தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தமிழக அரசால் பிளாஸ்டிக் பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பனை ஓலைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பொருள்களை உபயோகப்படுத்துமாறு மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முகாம் ஒருங்கிணைப்பாளரும், பொருளாதாரத் துறை பேராசிரியரு[illegible]ன ரா.ரஜினி இதற்கான ஏற்பாடு[illegible]ளைச் செய்திருந்தார்.

# INTERNATIONAL SKATING: GOLD(08.01.2019)

## சர்வதேச அளவிலான ஸ்கேட்டிங் தங்கம் வென்ற உடுமலை மாணவி

**உடுமலை, ஜன. 8–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி மாணவி ஆர்த்தி, சர்வதேச அளவிலான ஸ்கேட்டிங் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில், சர்வதேச அளவிலான மாணவியருக்கான 'ஸ்பீடு ஸ்கேட்டிங்' போட்டி நடந்தது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இதில், உடுமலை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரி இளங்கலை இரண்டாமாண்டு கணிதவியல் துறை மாணவி ஆர்த்தி போட்டியில் பங்கேற்றார். போட்டியில், ரிங் 1, ரிங் 2 மற்றும் ரிங் 2ஏ உள்ளிட்ட பிரிவுகளில் பங்கேற்று, மூன்றிலும் தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும் தனிநபர் சாதனையாளருக்கான கோப்பையும், இம்மாணவிக்கு வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற மாணவியை, கல்லூரி செயலாளர் ரவீந்திரன், கல்லூரி முதல்வர் கலைச்செல்வி, உடற்கல்வி இயக்குனர், பேராசிரியர்கள் மற்றும் மாணவி:பின் பயிற்சியாளர் காமராஜ் உள்ளிட்டோர் பாராட்டினர்.



கல்லூரி நிர்வாகிகளுடன், சர்வதேச அளவிலான ஸ்கேட்டிங் போட்டியில் தங்கம் வென்ற ஜி.வி.ஜி., கல்லூரி மாணவி ஆர்த்தி.

# PONGAL CELEBRATION (12.01.2019)



# பள்ளி கல்லூரியில் பொங்கல் கொண்டாட்டம்

## மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் அசத்தல்

**உடுமலை, ஜன. 12–**

தமிழ்நாடு மாசு கட்டு பாட்டு வாரியம் திருப்பூர் மாவட்டத்தின் சார்பில், உடுமலை பாரதியார் நூற்றாண்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் பொங்கல் விழா நடந்தது.

விழாவில், பள்ளி தலைமையாசிரியர் விஜயலட்சுமி வரவேற்றார். உடுமலை மாவட்டக்கல்வி அலுவலர் மணிவண்ணன் தலைமை வகித்தார். விழாவின் துவக்கமாக, மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பள்ளி நிர்வாகம் இணைந்து, சுற்றுச்சூழல் பொங்கல் வைத்தனர். திருப்பூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் சண்முகம்(திருப்பூர் தெற்கு மண்டலம்), மாணவர்களுக்கு புகையில்லாமல் போகி கொண்டாடுவது, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் பொங்கல் வழிபாடு நடத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாணவியரின் பல்வேறு கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடந்தன.

விழாவில், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சத்யபாமா, கிராம கல்விக்குழு தலைவர் கிருஷ்ணவேணி, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் விஜயா, பெற்றோர், ஆசிரியர்கள் பங்கேற்றனர். சமூக ஆர்வலர் [illegible] கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன.

உடுமலை, ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்த பொங்கல் விழாவில், கல்லூரி செயலாளர் ரவீந்திரன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் கலைச்செல்வி பொங்கல் விழாவை வைத்து வழிபட்டனர். துவக்கி வைத்தார். மாணவியரின் ஆரவாரத்துடன் பேராசிரியர்கள் பொங்கல் தொடர்ந்து கோ பூஜை நடந்தது. மாணவியரின் கும்மி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், உள்ளிட்ட கிராமிய நடன நிகழ்ச்சிகள் நடந்தன. வீர விளையாட்டுகளாக உரி அடித்தல், கயிறு இழுத்தல் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடந்தன. விழாவுக்கான ஏற்பாடுகளை, கல்லூரி பேரவை மன்ற ஒருங்கிணைப்பாளர் சரஸ்வதி மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர். உடுமலை, ஆர்.கே.ஆர்., கிரிக்ஸ் மேல்நிலைப்பள்ளியில், மாணவர்களின் பாரம்பரிய நடனங்களோடு, பொங்கல்விழா நடந்தது.

விழாவில், ஆர்.கே.ஆர்., கல்விக்குழு தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். செயலாளர் கார்த்திக்குமார் முன்னிலை வகித்தார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து, சூரியப் பொங்கல், மாட்டுப் பொங்கல் வைத்து வழிபட்டனர்.

தொடர்ந்து குழந்தைகளின் கிராமிய நடனத்தோடு கலைநிகழ்ச்சிகள் துவங்கியது. மாணவர்களின் சிலம்பாட்டம், மாணவியரின் கரகாட்டம், ஒயிலாட்டம், நாட்டுபுற நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடந்தன. பள்ளி முதல்வர் மாலா மற்றும் ஆசிரியர்கள் விழாவை ஒருங்கிணைத்தனர்.

**குடிமங்கலம்**

குடிமங்கலம் ஒன்றியம், சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மாணவர்கள் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

பள்ளி தலைமையாசிரியர் கோப்பெருந்தேவி தலைமை வகித்தார். மாணவர்கள், வண்ண உடைகள் அணிந்து பொங்கலை கொண்டாடினர். மாணவர்கள், உற்சாகத்தில் குலவை சத்தமிட, ஆசிரியர்கள் பொங்கல் வைத்தனர். மாணவியர் கும்மியடித்து பாட்டு பாடினர்.

விழாவில், பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் கார்த்திகா மற்றும் உறுப்பினர்கள், வட்டார வள மைய ஆசிரியர்கள், பெற்றோரும் பங்கேற்றனர்.

உடுமலை பாரதியார் நூற்றாண்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், சுற்றுச்சூழல் பொங்கல் விழா கொண்டாடிய மாணவியர். பத்ரகாளியம்மன் லே–அவுட் அங்கன்வாடி மையத்தில், சமத்துவ பொங்கல் விழா கொண்டாடிய குழந்தைகள்.

உடுமலை ஆர்.கே.ஆர்.கிரிக்ஸ் மேல்நிலைப் பள்ளியில் நடந்த பொங்கல் விழாவில், தேவராட்டம் ஆடும் மாணவர்கள். ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடிய மாணவியர்.

# BOOK FAIR (25.01.2019)

## வாசிப்பை நேசிக்க புத்தக கண்காட்சி! தள்ளுபடி விற்பனையில் பல்வேறு புத்தகங்கள்

**உடுமலை, ஜன. 25–**

உடுமலை ஜி.வி.ஜி.,கல்லூரி மற்றும் விஜயா பதிப்பகம் சார்பில், ஜி.வி.ஜி.,கலையரங்கில், புத்தக கண்காட்சி நேற்று துவங்கியது. கல்லூரி செயலாளர் ரவீந்திரன் துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் கலைசெல்வி மற்றும் பேராசிரியர்கள் முன்னிலை வகித்தனர்.

கண்காட்சியில், எழுத்தாளர்களின் புகழ்மிக்க தமிழ் நாவல்கள், ஆங்கிலத்தில் அதிகம் பேசப்பட்ட புத்தகங்கள், பாரம்பரிய உணவு முறையால் பயமில்லாமல் வாழ வழிசொல்லும் படைப்புகள், அடிப்படை தேவைகளுக்கும் பல போராட்டங்களை சந்தித்தவர்கள் வாழ்க்கையின் உச்சம் தொட்ட ரகசியங்களை பகிரும் படைப்புகள், வாழ்வியலை பேசும் இலக்கிய படைப்புகள், ஜோதிடம், புகழ்மிக்க ஆன்மிக தலங்கள் மற்றும் அவற்றின் வரலாறுகள், குழந்தைகள் உளவியல் குறித்த நிபுணர்களின் படைப்புகள், பொருளியல், வணிகவியல் துறை சார்ந்த புத்தகங்கள் என, 60க்கும் மேற்பட்ட பதிப்பகங்களிலிருந்து, பத்தாயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



உடுமலை ஜி.வி.ஜி., கலையரங்கில், நேற்று துவங்கிய கண்காட்சியில் புத்தகங்களை ஆர்வத்துடன் பார்வையிடும் மாணவியர்.

குழந்தைகளுக்கான சிறு கதை, எளிய நடையில் உள்ள நன்னெறி கதை புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சி, 27 ம்தேதி வரை நடக்கிறது.

காலை, 10:00 மணிக்கு துவங்கி, இரவு, 8:00 மணி வரை நடக்கிறது. புத்தகங்களுக்கு, 10 சதவீதம் தள்ளுபடி விற்பனையும் வழங்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# READING HABITS SHOULD BE IMPROVED

**(02.02.2019)**



# வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த வேண்டும்

## 'கவிஞர்களாக கவிஞர் 'டிப்ஸ்'

உடுமலை, பிப். 2–

''கவிஞர்களாக மாற, முதலில் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த வேண்டும்,'' என, கவிஞர் நர்மதா பேசினார்.

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், தமிழ்த்துறை சார்பில், 'தமிழ் இலக்கியத்தில் ஆளுமை மேம்பாட்டு சிந்தனைகள்' என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் பயிலரங்கம் நடந்தது.

தமிழ்த்துறை தலைவர் தமிழ்பாவை வரவேற்றார். கல்லூரி செயலாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் பொறுப்பு கலைசெல்வி முன்னிலை வகித்தார். முதல் நாளில், 'புதிய இலக்கியத்தில் புரட்சிப்பெண்கள்', தலைப்பில் கோவை நிர்மலா மகளிர் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர் அருள்சீலி பேசினார்.

தொடர்ந்து, 'பக்தி இலக்கியத்தில் பாவையர் மேம்பாடு', என்ற தலைப்பில் கவிஞர் ராணி, 'பாவேந்தர் படைப்புகளில் பெண் ஆளுமை' என்ற தலைப்பில் பாரதியார் பல்கலைக்கழக பேராசிரியர் சித்ரா, 'பாரதி பார்வையில் மகளிர்', என்ற தலைப்பில் திருப்பூர் குமரன் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் கண்ணகி பேசினார்.

தொடர்ந்து, நேற்று 'நீதி இலக்கியத்தில் நேரிழை ஆளுமை', என்ற தலைப்பில் பழனியாண்டவர் மகளிர் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் வாசுகி பேசினார்.

தொடர்ந்து, பெண்மையின் மேன்மையை புலப்படுத்தும் புதுக்கவிதைகளை சுட்டிக்காட்டி கவிஞர் நர்மதா பேசியதாவது:

புதுக்கவிதைகள் பலவும், இன்னமும், பெண்களின் அவலத்தை உரைப்பதாக இருக்கிறதே தவிர, அதற்கான தீர்வை கூறும் கவிதைகளின் எண்ணிக்கை சில மட்டுமே.

இன்னமும், பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக்கொள்ள அவர்கள் ஒரு துணை தேடும் நிலை தான் பெரும்பான்மையானவர்களுக்கு உள்ளது.

இனியும் கண்ணீர் வடிப்பதை விட்டு, அதை துடைக்கும் வழியை பெண்கள் தேட வேண்டும். பெண் கவிஞர்கள் தற்போது அதிகம் வளர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கவிஞர்களாக மாற, முதலில் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

விழாவுக்கான ஏற்பாடுகளை, தமிழ்த்துறை பேராசிரியர்கள், சாரதாமணி, வசுமதி செய்திருந்தனர்.

# COIN EXHIBITION (03.02.2019)

# கல்லூரியில் நாணயங்கள் கண்காட்சி

**உடுமலை, பிப். 3–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், நாணயங்கள் கண்காட்சி நடந்தது.

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் வரலாறு துறையின் சார்பில், 'இந்திய கலை கட்டட கலை', என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. இதன் ஒரு பகுதியாக, நாணயங்கள் கண்காட்சி இடம் பெற்றது.

இரண்டு நாட்கள், கண்காட்சி, கல்லூரி அரங்கில் நடந்தது. பல்லடத்தைச் சேர்ந்த தமிழர் பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ராஜேந்திரன் சார்பில் நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.



■ உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்த, நாணய கண்காட்சியை பார்வையிடும் மாணவியர்.

சங்க காலம் முதல், சுதந்திரம் பெறும் வரையிலான 200க்கும் அதிகமான நாணயங்கள் கண்காட்சியில் இடம் பெற்றன. ஒவ்வொரு நாணயத்திலும், அதன் காலம், நாணயம் உணர்த்தும் பொருள், எழுத்துகள், அளவு, எடை, வடிவம் என அனைத்தும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

உடுமலை சுற்றுப்பகுதி கல்லூரி மாணவர்கள், கண்காட்சியை பார்வையிட்டனர்.

நிகழ்ச்சிகளை, வரலாற்றுத்துறை பேராசிரியர் செண்பகவள்ளி ஒருங்கிணைத்தார்.

# SEMINAR (08.02.2019)

## கல்லூரியில் கருத்தரங்கம்

உடுமலை, பிப். 7: உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பொருளாதாரத் துறை சார்பில் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். முதல்வர் கலைச்செல்வி முன்னிலை வகித்தார்.

பொருளாதாரத் துறை தலைவர் மா.ராதா வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் எஸ்.ஜானகிராமன் இந்திய பொருளாதார எல்லையும், அதன் மாற்றங்களும் என்ற தலைப்பில் பேசும்போது, முகலாயர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய பொருளாதாரம் எப்படி சுரண்டப்பட்டது, இந்தியா சுதந்தரம் அடைந்ததில் இருந்து பொருளாதார நிபுணர்களின் பங்கு, தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலக மயமாக்கல், நவீன மயமாக்கல், எதிர்கால இந்தியாவின் வளர்ச்சி மற்றும் தடைகள் குறித்து பேசினார்.

இதைத் தொடர்ந்து பேராசிரியர்கள்–மாணவியர் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. பேராசிரியர் ஸ்ரீபிரியா நன்றி கூறினார்.

# SPORTS DAY (11.02.2019)



உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில்

## விளையாட்டு விழா

உடுமலை, பிப்.11–

உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியின் விளையாட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. விழாவையொட்டி ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. மாணவிகளின் அணி வகுப்பு நடந்தது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ்.கலைச் செல்வி தலைமை தாங்கினார். உடற்கல்வி இயக்குனர் பா.சுஜாதா வரவேற்றுப்பேசினார். தேசிய மாணவர் படைத் தலைவரான உதவிப்பேராசிரியை பி.கற்பகவல்லி ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் நடந்தன. கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

விழாவில் முன்னாள் ஒலிம்பிக் வீரரும், இந்திய கூடைப்பந்தாட்ட அணியின் தலைவருமான என்.அமர்நாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில் " ஒரு குழுவின் தலைமைப்பண்பே அந்த குழுவின் வெற்றிக்கு வழி வகுக்கிறது. வெற்றியாளருக்கு வசதி வாய்ப்பு தேவையில்லை. திறமையும், அனுபவமும் மட்டுமே போதுமானது" என்று கூறினார். மேலும் அவர் விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். முடிவில் மாணவி கே.சவுந்தர்யா நன்றி கூறினார்.

# DEPARTMENT OF ECONOMICS SEMINAR
# (11.02.2019)

## பொருளாதார துறை கருத்தரங்கம்

**உடுமலை:** ஜி.வி.ஜி., விசாலாட்சி மகளிர் கல்லூரியில், பொருளாதாரத்துறை சார்பில், கருத்தரங்கம் நடந்தது. பொருளாதாரத்துறை தலைவர் ராதா வரவேற்றார். பேராசிரியர் ஜானகிராமன், இந்திய பொருளாதார எல்லையும், அதன் மாற்றங்கள் குறித்து பேசினார்.

அப்போது,' இந்தியா சுதந்திரம் அடைந்ததில் பொருளாதார நிபுணர்களின் பங்கு, முகலாயர்கள், ஆங்கிலேயர் காலத்தில் இந்திய பொருளாதார சுரண்டல், திட்டமிடலும், பொருளாதார வளர்ச்சியும், தாராளமயமாக்கல், உலக பொருளாதாரத்தில் இந்தியாவின் வளர்ச்சிக்கான வழிகள் மற்றும் தடைகள் குறித்து விளக்கினார். பேராசிரியை ஸ்ரீ பிரியா நன்றி கூறினார்.

# Dr.V.Gengusamy Naidu Memorial Day (15.02.2019)

## கெங்குசாமி நாயுடு நினைவு நாள் கூட்டம்

உடுமலை, பிப்.15–

உடுமலையில் பிரபல தொழில் அதிபரும், பல கல்வி நிறுவனங்களின் ஸ்தாபகருமான வி.கெங்குசாமி நாயுடு காலமாகி ஒருஆண்டு நிறைவடைந்ததை யொட்டி உடுமலை மண்டல தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கம் சார்பில் உடுமலை காந்தி நகரில் உள்ள சங்க அலுவலகத்தில் நினைவு அஞ்சலி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வி.கெங்குசாமி நாயுடுவின் உருவப்படத்திற்கு தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநில தலைவரும் உடுமலை மண்டல தலைவருமான ஜி.ரவீந்திரன், உடுமலை மண்டல செயலாளர் ஜி.நடராஜன், பொருளாளர் வி.நாராயணசாமி, இணைத்தலைவர் டி.ராமகிருஷ்ணன், சி.மவுனகுருசாமி உள்பட பலர் மலர் அஞ்சலி செலுத்தினார்கள். இதுபோல் உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் சார்பில் உடுமலை ஜி.வி.ஜி. கலையரங்களில் நடந்த முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் வைக்கப்பட்டிருந்த வி.கெங்குசாமி நாயுடு உருவப்படத்துக்கு ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ்.கலைச்செல்வி, பேராசிரியைகள், மாணவிகள், உடுமலை மக்கள் பேரவை தலைவர் யு.கே.பி.முத்துக்குமாரசாமி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஆர்.சிவசண்முகம், குமாரராஜா, ஆர்.கே.ஆர்.கல்வி நிறுவனங்களின் தலைவர் ஆர்.கே.ராமசாமி மற்றும் உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் நிர்வாகிகள் உள்பட பலர் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

# SEMINAR (17.02.2019)

## ஜிவிஜி கல்லூரியில் கருத்தரங்கம்

உடுமலை, பிப்.16: உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் கணிதத் துறை சார்பில் இயற்கை மற்றும் சமூக அறிவியலில் கணித மாதிரிகள் என்கிற தலைப்பில் கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

இக்கருத்தரங்கை கல்லூரிச் செயலர் கெ.ரவீந்திரன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். முதல்வர் எஸ்.கலைச் செல்வி முன்னிலை வகித்தார். கணிதத் துறைத் தலைவர் பேராசிரியர் என்.ஜெயந்தி வரவேற்றார். இதில் பாரதியார் பல்கலைக்கழக கணிதத் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர்.சக்திவேல் கருத்தரங்கின் நோக்கம் குறித்து பேசினார்.

இலங்கையில் உள்ள கொழும்பு பல்கலைக்கழக கணிதத் துறை பேராசிரியர் எஸ்.எஸ்.நிஸாந்தா




கருத்தரங்கில் கணிதத் துறையில் தகவல் களஞ்சியம் என்கிற தலைப்பிலான புத்தகத்தை வெளியிடுகிறார் பேராசிரியர் சக்திவேல்.

பெரார‌ா, கௌனியா பல்கலைக்கழக பேராசிரியர் யு.பிரபாத் லியனாயகே ஆகியோர் துறை வல்லுநர்களாக கலந்து கொண்டு பேசினர்.

கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து 200 க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர் என்.ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

# PAINTING EXHIBITION (19.02.2019)

## ஜிவிஜி கல்லூரியில் ஓவியக் கண்காட்சி

**உடுமலை, பிப்.19:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் குப்பையில்லா உலகம் என்கிற தலை ப்பில் ஓவியக் கண்காட்சி செவ் வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை தமிழ்த் துறையும், ஈர நிலம் அமைப்பும் இணைந்து நடத்தியது. கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் கண்காட்சியை துவக்கி வைத்தார். முதல்வர் எஸ்.கலைச்செல்வி முன்னிலை வகித்தார்.

பேராசிரியர் வே.செடிப்பவுன் வரவேற்றார். ஈர நிலம் அமைப்பின் தலைவர் ஓவியர் ந.தமிழரசன் கண்காட்சியின் நோக்கம் குறித்து பேசி னார். மாணவி ம.ஸ்டெனோ கருத்துரை வழங்கினார். இதையொட்டி, குப்பையில்லா உலகம் படைப்போம் என்ற உறுதிமொழியை மாணவி கள் எடுத்துக் கொண்டனர். கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விழிப்புணர்வு ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஜிவிஜி கல்லூரி, ஆர்ஜிஎம் மற்றும் ஜிவிஜி விசாலாட்சி பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவிகள் கண்காட்சியை பார்வையிட்டனர். செந்தமிழ் மன்றச் செயலர் ம.ராகவி நன்றி கூறினார்.

## SEMINAR (20.02.2019)

**உடுமலை, பிப். 20–**

உடுமலை, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரி கணிதத்துறை சார்பில் 'இயற்கை மற்றும் சமூக அறிவியலில் கணித மாதிரிகள்', தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி செயலாளர் ரவீந்திரன் கருத்தரங்கை துவக்கி வைத்தார். பாரதியார் பல்கலைக்கழக கணிதத்துறை தலைவர் சக்திவேல் கருத்தரங்கத்தின் நோக்கம் குறித்து பேசினார். தொடர்ந்து, கொழும்பு, எஸ்.எஸ். நிசாந்தா பெரரா மற்றும் கவுனியா பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்தரங்கில் பேசினர்.

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 192 பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் பங்கேற்றனர்.

# CONVOCATION (24.02.2019)

## ஜிவிஜி கல்லூரியில் பட்டமளிப்பு விழா

உடுமலை, பிப். 23: உடும[illegible]விஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்கு கல்லூரிச் செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி வரவேற்றார். மும்பை ஹோமி யோபதி அறிவியல் ஆராய்ச்சி மைய இயக்குநரான பேராசிரியர் கே.சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் பேராசிரியர் சுப்பிரமணியம். உடன், கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன்.

2014-17 கல்வி ஆண்டில் நிறைவு செய்த இளங்கலை, முதுகலை மாணவிகள் 920 பேர் பட்டம் பெற்றுக் கொண்டனர். கல்லூரி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் தி.வி.பானுமதி, பேராசிரியர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினமணி

# THROWBALL CHAMPIONS (26.02.2019)

## த்ரோபால்; ஸ்ரீராமகிருஷ்ணா, ஜி.வி.ஜி.,வெற்றி

**கோவை, பிப். 26–**

மாவட்ட அளவில் கல்லூரி மாணவியருக்கான த்ரோபால் போட்டியில், ஸ்ரீராமகிருஷ்ணா பெண்கள் கலை அறிவியல் கல்லூரி அணி, உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

கோவை, ஸ்ரீராமகிருஷ்ணா பெண்கள் கலை அறிவியல் கல்லூரியின் உடற்கல்வி துறை சார்பில், கல்லூரி மாணவியருக்கான த்ரோபால் போட்டி, கல்லூரி மைதானத்தில் நடந்தது. கல்லூரி முதல்வர் சித்ரா துவக்கி வைத்தார். நாக்– அவுட், லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன. 13 அணிகள் பங்கேற்றன.



இந்த விளையாட்டுக்கான வீடியோவை, தினமலர் 'மொபைல் ஆப்' இலவசமாக பதிவிறக்கம் செய்து அல்லது www.dinamalar.com தளத்தில் பார்க்கலாம்

■ கோவை ராமகிருஷ்ணா பெண்கள் கலை அறிவியல் கல்லூரியில் நடந்த த்ரோபால் போட்டியில், உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரியும் கதிர் கல்லூரியும் மோதின.

நாக்– அவுட் முறையில் போட்டியில், எஸ்.என்.எஸ்., கல்லூரி அணி, 2–1 என்ற செட் கணக்கில், நிர்மலா கல்லூரி அணியையும்; 2வது போட்டியில், கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி அணி, 2–0 என்ற செட் கணக்கில், கோவை அரசு கலை அறிவியல் கல்லூரி அணியையும்; 3வது போட்டியில், உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரி அணி, 2–0 என்ற செட் கணக்கில், கதிர் கலை அறிவியல் கல்லூரி அணியையும் வென்றன.

லீக் முதல் போட்டியில், ராமகிருஷ்ணா பெண்கள் கலை அறிவியல் கல்லூரி அணி, 2–1 என்ற செட் கணக்கில், எஸ்.ஆர்., கலை அறிவியல் கல்லூரி அணியை வென்றது. உடற்கல்வி இயக்குனர் பாகேஸ்வரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# FOUNDERS DAY (28.02.2019)

## ஜிவிஜி கல்லூரி நிறுவனர் நாள்



சிறப்பிடம் பெற்ற மாணவிக்கு பரிசு வழங்குகிறார் பழ.கருப்பையா.

**உடுமலை, பிப். 28:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நிறுவனர் நாள் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். முதல்வர் எஸ்.கலைச்செல்வி வரவேற்றார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பழ. கருப்பையா, கம்பன் என்றொரு மானுடன் என்ற தலைப்பில் பேசியதாவது:

தமிழ் மொழிக்கு புதிய சொற்களை உருவாக்கும் ஆற்றல் உள்ளது. ஒலி வடிவத்தில்தான் தமிழின் உயிரோட்டம் உள்ளது. இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், அறிவியல் என எந்த பாடங்களைப் படித்தாலும் தமிழில் பேசவும், தங்களது தனித்திறன், ஆளுமைப் பண்புகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, பொறுமை, துணிச்சல், தியாகம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியற்றை மாணவியர் கடைபிடித்து வாழ்க்கையில் சிறந்து விளங்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் ஜிவிஜி விசாலாட்சி பள்ளி, கல்லூரியில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவியருக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவி எம்.ஸ்டோணோ அபர்ணா நன்றி கூறினார்.

தினமணி 1.3.19 Pg:NO: 4

# SEMINAR (02.03.2019)

# ஜிவிஜி கல்லூரியில் பொருளாதார கருத்தரங்கு

தினகரன்
2.3.19



▶ உடுமலை ஜிவிஜி கல்லூரியில் பொருளாதார கருத்தரங்கு நிகழ்ச்சியில் 15 கல்லூரிகளில் இருந்து பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

உடுமலை, மார்ச் 2:உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின்பொருளாதாரத்துறை சார்பில், அதிநவீன நகரங்களின் வளர்ச்சியின் வழியே நவீன பொருளாதாரம் என்ற தலைப்பில் உலகளாவிய கருத்தரங்கம் நடந்தது.

சுவரொட்டி விளக்க காட்சி, மாதிரி தயாரிப்பு சார்பான போட்டிகள் நடந்தன.நிகழ்ச்சியில் மாவட்டத்தில் உள்ள 15 கல்லூரிகளில் இருந்து பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

பொருளாதார துறை தலைவர் ராதா வரவேற்றார்.முதல்வர் (பொறுப்பு) கலைச்செல்வி தலைமை வகித்தார். எத்தியோப்பியா ஆம்போ பல்கலைக்கழக முனைவர் நக்கீரன் சிறப்புரையாற்றினார்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி பேராசிரியர் பாலமுருகன், நவீன நகரங்களின் சிறப்பம்சங்கள், எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறித்து பேசினார். மதுரை காமராஜர் பல்லைக்கழக பேராசிரியர் முனைவர் சித்ரா நகர ஆரோக்கியம் பற்றி விளக்கினார்.

மதுரை மதுரா கல்லூரிபொருளாதாரதுறை தலைவர் தீனதயாளன் சிறப்புரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் காளியம்மாள் நன்றி கூறினார்.

# INITIATION OF VOULUNTARY ORGANIZATION(09.03.2019)

# மையத்தடுப்பில் அரளி பூங்கா

## தன்னார்வ அமைப்புகள் துவக்கம்

**உடுமலை, மார்ச் 9–**

பழநி ரோட்டின், மையத்தடுப்புகளில், 'மழை – உடுமலை' சார்பில், அரளிச்செடிகள் நடவு செய்யப்பட்டது.

ரோடுகளில், வாகனங்களால் ஏற்படும் காற்று மாசை குறைக்கும் வகையில் அரளி செடிகள் நட்டு, பராமரிக்கப்படுகிறது. உடுமலை பஸ் ஸ்டாண்டிலிருந்து கொழுமம் ரோடு பிரிவு வரை, தேசிய நெடுஞ்சாலையில் மையத்தடுப்பு அமைக்கப்பட்டது. அதில், அரளி செடிகளும் நடப்பட்டன.

ஆனால், செடிகள் பராமரிப்பில்லாமல், காய்ந்தது. இதனையடுத்து, 'மழை–உடுமலை' அமைப்பு சார் அரளி செடிகள் நட்டு, பில், மையத்தடுப்புகளில் பராமரிக்க திட்டமிடப்பட்டது. அதற்கான விழா நேற்று நடந்தது. மழை உடுமலை அமைப்பு நிர்வாகிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் இணைந்து, மையத்தடுப்புகளில், 333 அரளி செடிகள் நட்டனர்.

பொள்ளாச்சி எம்.பி.,மகேந்திரன் துவக்கி வைத்தார். நிர்வாகிகள் கூறுகையில்,' மழை–உடுமலை சார்பில் நடப்பட்டுள்ள அரளி செடிகள் பராமரிப்பு, மையத்தடுப்பு பகுதி அரளி பூங்காவாக மாற்றப்படும்.

இதற்கு, தனியார் அமைப்புகள் டிராக்டர் வழங்குகிறது. நகராட்சி தண்ணீர் வழங்குகிறது,' என்றனர்.



'மழை – உடுமலை' அமைப்பு சார்பில் தேசிய நெடுஞ்சாலையின் மைய தடுப்பில், அரளி செடிகளை நடும் மாணவியர்.

# COLLEGE DAY CELEBRATIONS
# (10.03.2019)

## கல்லூரி ஆண்டு விழா

**உடுமலை:** ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் ஆண்டு விழா நடந்தது. கல்லூரி பேரவைத் தலைவர் சரஸ்வதி வரவேற்றார். செயலாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர்(பொறுப்பு) கலைச்செல்வி ஆண்டறிக்கை வாசித்தார்.

ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ்., அதிகாரி பாரி, கல்லூரியின் செயல்பாடுகளை பாராட்டினார். வகுப்பு வாரியாக முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மற்றும் மன்ற செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவியர் மற்றும் பேராசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவி ராகவி நன்றி கூறினார்.

# PLANTING TREE SAPLING IN THE HIGH WAY (10.03.2019)



உடுமலையில்

## நெடுஞ்சாலை மையத்தடுப்பு பகுதியில் மரக்கன்று நட்ட மாணவிகள்

உடுமலை, மார்ச்.10–

உடுமலையில் மழை உடுமலை என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பினர் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர். அத்துடன் மரம் வளர்ப்பதால் கிடைக்கும் பலன்கள் குறித்து பிரசாரமும் செய்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக உடுமலை நகரில் தேசிய நெடுஞ்சாலையின் மையத்தடுப்பு பகுதியில் அரளிச்செடிகள் நடும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு மழை உடுமலை அமைப்பின் தலைவர் வர்ஷினி எம்.ஆர். இளங்கோ தலைமை தாங்கினார். செடிகள் நடும் நிகழ்ச்சியை பொள்ளாச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி.மகேந்திரன் தொடங்கிவைத்தார். தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் கலந்து கொண்டு செடிகளை சாலையின் மையத்தடுப்பு பகுதியில் நட்டனர். அவர்கள் மொத்தம் 333 செடிகளை நடுவதற்கான பணிகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் எல்.ஐ.சி. ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

# POLICE IG PARI SPEECH (11.03.2019)




## ‘கடின உழைப்பே வெற்றிக்கு வழிவகுக்கும்’

### உடுமலை மகளிர் கல்லூரி விழாவில் போலீஸ் ஐ.ஜி.பாரி பேச்சு

உடுமலை, மார்ச்.11– உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் 67–வது ஆண்டு விழா கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரியின் செயலாளர் ஜி.ரவீந்திரன் தலைமை தாங்கினார். கல்லூரி பேரவை மற்றும் வரலாற்றுத்துறை தலைவர் வி.கே.சரஸ்வதி வரவேற்றுப்பேசினார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ்.கலைச்செல்வி ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் போலீஸ் ஐ.ஜி.பாரி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் “கடின உழைப்பே வெற்றிக்கு வழி வகுக்கும், மாணவிகள் ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ள தனித்திறமைகளை வெளிக்கொண்டு வர வேண்டும்” என்று கூறினார். வகுப்பு வாரியாக முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகள், கல்லூரியில் உள்ள மன்ற செயல்பாடுகளில் வெற்றி பெற்ற மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

விழாவையொட்டி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முடிவில் மாணவி எம்.ராகவி நன்றி கூறினார்.

# NAAC Accreditation (28.03.2019)

## கல்லூரியில் தேசிய தர மதிப்பீட்டுக் குழு ஆய்வு



**உடுமலை ஜிவிஜி கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன், கல்லூரி முதல்வர் கலைச்செல்வி ஆகியோரிடம் ஆய்வு அறிக்கையை ஒப்படைத்த தேசிய தர மதிப்பீட்டுக் குழுத் தலைவர் டாக்டர் முகமது அலி அக்பர்.**

**உடுமலை, மார்ச் 27:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் தேசிய தர மதிப்பீட்டுக் குழு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் ஆய்வு மேற்கொண்டது.

இதையொட்டி கல்லூரியில் அனைத்துத் துறைகளிலும் பாடத் திட்டம், கற்றல் கற்பித்தல், உள் கட்டமைப்பு, மாணவியர் மேம்பாடு, நிர்வாகத் தலைமை மற்றும் மேலாண்மை, நிறுவனத்தின் மதிப்பு, சிறப்புப் பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

மேலும் தேர்வு கட்டுப்பாட்டுத் துறை, மகளிர் ஆய்வு புலம், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, செஞ்சிலுவை சங்கம், விளையாட்டுத் துறை, மாணவியர் விடுதி போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. டாக்டர் முகமது அக்பர் அலிகான் (ஹைதராபாத்) தலைமையில் உறுப்பினர்கள் டாக்டர் ஓம்.மகோ தயா (மகாராஷ்டிரம்), பேராசிரியர் சுதாராய் (ராஜஸ்தான்) ஆகியோர் கொண்ட குழு இந்த ஆய்வுகளை மேற்கொண்டது.

கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன், முதல்வர்(பொறுப்பு) கலைச்செல்வி, அக தர காப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் என்.ராஜேஸ்வரி, பேராசிரியர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# AWARD OF ‘A PLUS’ CERTIFICATE (06.04.2019)

## கல்லூரிக்கு ‘ஏ பிளஸ்’தரச்சான்று வழங்கல்

உடுமலை, ஏப். 6–

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி கல்லூரிக்கு ‘ஏ பிளஸ்’, தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

உடுமலை, ஜ.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் ‘நாக்’ எனப் படும் தேசிய தர மதிப் பீட்டு குழுவினர், மார்ச் 26,27ம் தேதிகளில் ஆய்வு நடத்தினர்.

டாக்டர் முகமது அக்பர் அலிகான் தலைமையில், பேராசிரியர் சுதாராய் மற் றும் டாக்டர் மகோதயா உள்ளிட்டோரை உறுப்பி னர்களாக கொண்ட குழு ஆய்வு நடத்தியது.

ஆய்வில் தர மதிப்பீடுக் கான ஏழு அளவுகோல் களின் அடிப்படையில் கல்லூரிக்கு , ‘ஏ பிளஸ்’, தரசான்று வழங்கப் பட்டுள்ளது.

கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக, பொறுப்பு முதல்வர் கலைச்செல்வி, செயலா ளர் ரவீந்திரன் தெரிவித்த னர்.